28.08.2023.

OS.No.88/2020

PW1- மாடசாமி

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 28.08.2023.

குறுக்கு விசாரணை : ( பிரதிவாதி தரப்பில்)

1. பிராது 2ம் தபசில் 1ம் அயிட்ட சொத்தை பொறுத்து தென்காசி, மாண்புமிகு முதன்மை சார்பு நீதிமன்றத்தில் அ.வ.எண்.224/2019 வழக்கு தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணம் மேற்படி வழக்கின் வழக்குரை என்றால் சரிதான். **(அ.வ.எண்.224/2019 ல் சார்பு செய்யப்பட்ட வழக்குரையின் உண்மை நகல் பி.வாசா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

2. மேற்படி சொத்தானது 4ம் வாதி கோவிலுக்கு பாத்தியப்பட்டது என விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி வழக்கு நிலுவையில் இருப்பதால் இந்த வழக்கு தேவையற்றது என்றால் சரியல்ல. சர்வே எண்.149/1 ஆனது தற்போது சர்வே எண்கள்.149/1ஏ, 1பி என உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது.

3. சர்வே எண்.149/1ன் மொத்த விஸ்தீரணம் 85 செண்ட் என்றால் சரிதான். மேற்படி 85 செண்டில் 8 செண்ட் இடத்தை ஏ.ஆர்.ராமலிங்கம் என்பவர் 1975ல் அருணாசலம் என்பவருக்கு கிரையம் செய்துகொடுத்துவிட்டார் என்றால் சரிதான். மேற்படி கிரையம் கொடுத்ததுபோக மீதி 77 செண்ட் உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.10 தீர்ப்பாணையின்படி தபசில் சொத்தின் மொத்த விஸ்தீரணம் 77 செண்ட் என்றால் சரிதான்.

4. மேற்படி தீர்ப்பாணையின்படி சொத்தானது மேற்படி வழக்கின் 2ம் வாதி எம்.ராஜ்-க்கு பாத்தியப்பட்டது என தீர்ப்பாகி உள்ளது என்றால் சரிதான். மேற்படி ராஜ் இந்த வழக்கில் 1ம் பிரதிவாதி என்றால் சரிதான். 1ம் பிரதிவாதியிடம் இருந்து, 6 செண்ட் இடத்தை 2ம் பிரதிவாதி கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். ஆனால் அந்த கிரையம் செல்லாது. மேற்படி கிரையத்தின்படி என்னிடம் காட்டப்படும் பட்டாவின்படி தனியாக உட்பிரிவு செய்யப்பட்டு 2ம்பிரதிவாதி பெயரில் தனிப்பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். **(மேற்படி தனிப்பட்டா மற்றும் புலவரைபடம் பி.வா.சா.ஆ.2,3 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

5. வா.சா.ஆ.10 ஒருதலைபட்ச தீர்ப்பாணை ரத்து செய்ய சொல்லி தாக்கல் செய்த இடைக்கால மனுவானது தள்ளுபடி செய்யப்பட்டு, மேற்படி தள்ளுபடி உத்தரவானது மாண்புமிகு உயர்நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட்டது என்றாலும், மேற்படி அனுமதிக்கப்பட்ட உத்தரவை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீட்டு மனுவானது மாண்புமிகு உச்சநீதிமன்றத்தால் மீண்டும் விசாரணை செய்வதற்காக மாண்புமிகு உயர்நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டு, மாண்புமிகு உயர்நீதிமன்றம் மேற்படி சீராய்வு மனுவை தள்ளுபடி செய்து உத்தரவு பிறப்பித்துள்ளது என்றால் சரிதான்.

6. வா.சா.ஆ.10 ன்படி மேற்படி 77 செண்டானது 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி, 2ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்த 5 செண்ட் இடத்தில் 4ம் வாதி கோவில் இருப்பதாக உங்களது கட்சி என்றால் 4ம் வாதி கோவிலுக்கு மேற்குபக்கம் மேற்படி 5 செண்ட் உள்ளது. அதனால் 4ம் வாதி கோவிலுக்கும், 2ம் பிரதிவாதி கிரையம் பெற்ற 5 செண்ட் இடத்திற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. அந்த இடம் அய்யா கோவிலுக்கு கொடுக்கப்பட்டது.

7. நீங்கள் குறிப்பிடும் அய்யா என்பவர் ஏ.ஆர்..எஸ்.ராமலிங்கம் என்றால் சரிதான். மேற்படி ஏ.ஆர்.எஸ்.ராமலிங்கம் வா.சா.ஆ.10 வழக்கில் 1ம் வாதி என்றால் சரிதான். ஏ.ஆர்.எஸ்.ராமலிங்கம் மனைவி மற்றும் மக்கள் இந்த வழக்கில் 1 முதல்3 வாதிகள் என்றாலும், அவர்கள்தான் உங்களுக்கு பொதுஅதிகார ஆவணம் கொடுத்துள்ளார்கள் என்றாலும் சரிதான்.

8. 1 முதல் 3 வாதிகளின் அனுபவத்தில் தபசில் சொத்து உள்ளது என்றும், அவர்களிடம் இருந்து 4ம் வாதி கோவில் இடத்தை பெற்று அனுபவம் செய்து வருவதாக சொல்லி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரிதான். இந்த வழக்கானது முன்தீர்ப்பு தடையால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அதைபோல் தபசில் சொத்தை பொறுத்து உரிமை பிரச்சனை இருப்பதால் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்த இந்த வழக்கும் நிலைக்கத்ததக்கதல்ல என்றால் சரியல்ல.

9. பிராதுதபசில் சொத்திற்கு வடக்குபக்கமாக கிழமேலாக தெரு உள்ளது என்றாலும், தெற்குபக்கமாக 1ம் பிரதிவாதி ஹாலோ பிளாக் கொண்டு 10 அடி உயரத்திற்கு சுவர் கட்டி அடைத்துவிட்டார் என்றாலும் சரிதான். 4ம் வாதிகோவிலுக்கு கிழக்குபக்கம்

அருணாசலம் நாயக்கர் வீட்டின் சுவர் உள்ளது என்றால் சரிதான். உங்களது கட்சிப்படி பிராது 2ம்தபசில் சொத்திற்கு மேற்கு மற்றும் தெற்குபக்கத்தில் 1ம் வாதி தென்னை மரம் வைத்துள்ளார் என்றால் சரிதான்.

10. மேற்படி தென்னைமரத்திற்கு போர்வெல் போட்டும், மேற்குபக்கமுள்ள 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட கிணற்றிலிருந்து தண்ணீர் எடுத்தும் நீர் பாய்ச்சி வருகிறார் என்றால் சரிதான். தற்போது உள்ள நிலையில் 4ம் வாதி கோவிலுக்குள் செல்லமுடியாது என்றாலும் மேற்படி ஹாலோ பிளாக் சுவரை உடைத்தால்தான் செல்லமுடியும் என்றாலும் சரிதான்.

11. மேற்படி தென்னைமரத்திலிருந்து 1ம்பிரதிவாதிதான் தேங்காய் பறித்துவருகிறார் என்றால் சரிதான். அதனால் உங்களது கட்சிப்படியே நீங்கள் கேட்டுள்ள நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் உங்களுக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. விளம்புகை பரிகாரம் கோராமல் கோரப்பட்டுள்ள செயலுறுத்துக்கட்டளை பரிகாரமும கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

12. பிராது 2ம்தபசில் 1ம் அயிட்ட சொத்திலுள்ள மின்இணைப்பை தமிழ்நாடு மின்சார வாரியம் துண்டித்துவிட்டதாக வழக்குரையில் குறிப்பிட்டுள்ளீர்கள் என்றால் சரிதான்.

**(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி மற்றொரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.)**

ஒம்/- திரு.கே.பாஸ்கர்
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
தென்காசி.